Registreed as a Newspaper in Ceylon ★ ★ விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

போன் National Tamil Daily தேசிய தினசரி தபாற் பெட்டி: எண்

மலர் 6 சோபகிருது மாசி 23 ஆம் நாள் ஷவ்வால் 21 (7-3-64) சனிக்கிழமை இதழ் 26

உங்களுடைய அன்றாட பாவனைக்கு
திறங்
கே. ஆர். லிங்கன்ஸ்
காப்பித்தூள், மிளகாய்த்தூள்
புதிய முறையில் தயாரிக்கப்பெற்றது
யாழ்ப்பாணம் பஜார் ஏஜண்ட்
எம். பரராசசிங்கம்
சேலம் பீடி ஏஜண்ட்ஸ்,
யாழ்ப்பாணம்.

# நிலைமை சீரானவுடன் அவசரகால சட்டம் வாபஸ்பெறப்படும்

## சபைமுதல்வர் அறிவிப்பு

### 'மின்சார விநியோகம் விரைவில்சீராகும்'

கொழும்பு, வெள்ளி

நாடெங்கிலும் நிலைமை வழமைபோல் ஆகிவிட்டதாக அரசாங்கம் திருப்திகொண்டால் அவசரகாலச் சட்டம் வாபஸ் பெறப்படுவதுபற்றி ஆலோசிக்கப்படும் என சபை முதல்வர் திரு. சி. பி. டி' சில்வா இன்று ஜனப்பிரதிநிதிகள் சபையில் அறிவித்தார்.

அவசரகாலச் சட்டத்தை அரசாங்கம் நேற்றுப் பிரகடனப்படுத்தியது சம்பந்தமாக எதிர்க்கட்சி எம். பி க்கள் எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளிக்கையிலேயே மேற் கண்டவாறு தெரிவித்தார்.

நேற்று ஆரம்பிக்கப்பட்ட மின்சார என்ஜினியர்கள் வேலைநிறுத்தம்சம்பந்தமாகவும் அதனால் எழுந்துள்ள நிலைமை குறித்தும் விளககிய பின்னர் இப்போதுள்ள நிலைபற்றிக் குறிப்பிட்டார்.

கொழுமபு கிருண்ட்பாஸ் மின்சார நிலையத்தில் வழமையான எண்ணிக்கையான உத்தியோகஸ்தர்கள் வேலை செய்வதாகவும் புறக்கோட்டை மின்சார நிலயத்தில் வழமைபோல் வேலை நடப்பதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப் பட்டுவருவதாகவும் தெரிவித்தார். (4-ம் பக்கம் பார்க்க)

## மின்சார என்ஜினியர் வேலைக்குத் திரும்பினர்

கொழும்பு, வெள்ளி

சகல மின்சார என்ஜினியர்களும் இன்று வேலைக்குத் திரும்பிவிட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மின்சாரப் பகுதியைச் சேர்ந்த ஓர் உயர்தர அதிகாரி இதனை அறிவித்துள்ளார்.

மின்சார என்ஜினியர்கள் 15 சத வீத பாதுகாப்பு அலவன்ஸ் கோரி நேற்று வேலைநிறுத்தம் செய்தனர்.

## யாழ். நகரில் குடிநீர் விநியோகம்

### மேயர் நடவடிக்கை

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாண நகரில் நேற்று முற்பகல் பதினொரு மணியளவில் மின்சார விநியோகம் மீண்டும் கிடைத்தது. யாழ்ப்பாண நகரில் குடிதண்ணீர் விநியோகத்துக்கு ஏற்ற ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளதாக நகர மேயர் திரு. தா. ச. துரைராஜா பொதுமக்களுக்கு "ஈழநாடு" மூலம் விடுத்துள்ள ஒரு அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

மேயர் தமது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளதாவது:-

யாழ். சிவில் ஆஸ்பத்திரிக்கும், மற்றும் பொதுஸ்தாபனங்களுக்கும் குடிதண்ணீர் விநியோகம் செய்வதற்கு என்னாலான முயற்சிகளை எல்லாம் எடுத்துள்ளேன். மேற்குறிப்பிட்ட இடங்களுக்கும், மற்றும் றெக்கிளமேஷன் வட்டாரம், பாடசாலைகள் தரும ஸ்தாபனங்கள் ஆகியவற்றுக்கும் மாநகரசபை லொறிகள் மூலம் தண்ணீர் விநியோகம் செய்வதற்கும் நடவடிக்கை எடுத்துள்ளேன். குடிதண்ணீர் விநியோகம் சம்பந்தமாகத் தொடர்பு கொள்ளவேண்டும் என்றால் மாநகரசபை ஆணையாளருடன் தொடர்புகொள்ளும்படி சகல பொது ஸ்தாபனங்களையும் வேண்டிக்கொள்ளுகின்றேன்.

குழாய் நீரைக் குடிப்பதற்கு மாத்திரம் பாவிக்கும்படியும், மற்றும் தேவைகளுக்குப் பாவிக்க வேண்டாமென்றும் பொது மக்கள் அனைவரையும் கேட்டுக் கொள்வதோடு என்னுடன் ஒத்துழைக்கும் படியும் பணிவுடன் வேண்டிக் கொள்ளுகிறேன். குடிதண்ணீர் சுத்தமானதுஎன்று உத்தரவாதமளிக்கமுடியாததால், தண்ணீரை கொதிக்க வைத்துக் குடிக்கும்படி கேட்டுக் கொள்ளுகின்றேன். யாழ். நகரம் இருள் அடைந்திருப்பதால், இரவுபூராவும் தவறாது ரோந்து புரியுமாறு யாழ். பொலிஸ் பகுதியினரை வேண்டியுள்ளேன்.

## எரிமலை கக்கியது

ஜாகர்த்தா, மார்ச் 6

கிழக்கு இந்தோனேஷியாவில் எரிமலை ஒன்று வெடித்ததின் காரணமாக 5000 பேர் அங்கிருந்து வெளியேறுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

உங்கள் கட்டிடங்கள்
உறுதியாக இருப்பதற்கு
திறமான
★ இரும்புச் சாமான்களும்
★ பெயின்டுவகைகளும்
★ அஸ்பஸ் சீட்டுகளும்
★ மர வகைகளும்
எம்மிடம்
பெற்றுக் கொள்ளலாம்
விஷ்ணு
ஹார்ட்வெயர் ஸ்ரோர்ஸ்
வல்வெட்டித்துறை

## கனடா தூதர் யாழ்ப்பாணம்வந்துசென்றார்

யாழ்ப்பாணம், சனி

இலங்கையில் கனடா தூதராக கடமையாற்றிய திரு. ஜேம்ஸ் ஜோர்ஜ் சென்னை மார்கமாகத் தாயகம் திரும்பும் வழியில் நேற்றுக் காலை யாழ்ப்பாணத்தில் சிறிது நேரம் தங்கினர். நேற்றுக் காலை திரு. ஜேம்ஸ் ஜோர்ஜும் அவரது மனைவியாரும் கொழும்புத்துறை சென்று யோகர் சுவாமியைச் சந்தித்தனர்.

நேற்று அவர்கள் விமான மார்க்கமாக யாழ்ப்பாணத்திலிருந்து சென்னை சென்றனர்.

## தேசிய லொத்தர் சுவீப் முடிவுகள்

கொழும்பு, வெள்ளி

நேற்று மாலை அனுராதபுரம் மத்திய மகாவித்தியாலயத்தில் இழுக்கப்பட்ட தேசிய லொத்தர் சபையின் இரண்டாவது சுவீப்பில் முதல் மூன்று பரிசுகளை பெற்ற டிக்கட் விபரம் வருமாறு:-

முதலாவது பரிசு

17 W 0233—ரூபா 50,000

இரண்டாவது பரிசு

20 T 0017—ரூபா 16,720

மூன்றாவது பரிசு

04 W 0223—ரூபா 10,000

## அத்தியாவசிய சேவைகள் என்னென்ன ?

கொழும்பு, வெள்ளி

நேற்றிரவு கவர்னர்ஜெனரலால் பிறப்பிக்கப்பட்ட அவசரகாலச் சட்டத்தின்கீழ் கீழ்க் கண்டவை அத்தியாவசிய சேவையாகப் பிரகடனப்படுத்தப்பட்டிருக்கின்றன.

1. உணவு, பான வகைகள் ஆகியவற்றின் சப்ளை. பாதுகாப்பு விநியோகம்.
2. பெட்ரோலியம் உற்பத்தி பொருட்கள், காஸ் உட்பட எரிபொருட்களின் சப்ளையும் விநியோகமும்.
3. மின்சாரசப்ளை.
4. பிரயாணிகள், சாமான்கள் ஆகியவற்றுக்கான அரசாங்க போக்குவரத்து சேவை.
5. தண்ணீர் சப்ளை.
6. தபால், டெலிபோன், தந்தி, ஒலிபரப்பு சேவைகள்.
7. கப்பல்களிலிருந்து இறக்குமதி, சேமிப்பு, விநியோகம், உணவு, பானம், நிலக்கரி, எண்ணெய், எரிபொருள் ஆகியன

(4-ம் பக்கம் பார்க்க)

## "அத்தியாவசிய சேவைகள் ஸ்தம்பித்தன அதனால் அவசரகாலநிலைமை பிரகடனம்"

### சி. பி. டி' சில்வா அறிவிப்பு

கொழும்பு, வெள்ளி

நாட்டில்அவசரகால நிலைமை பிரகடனம் செய்யப்பட்டுள்ளதென்று நேற்று பிற்பகல் 3-25-க்கு அரசாங்கம் அறிவித்தது. சபாநாயகர் திரு. ஹியூ பெர்னாண்டோ, நேற்று ஜனப் பிரதிநிதிகள் சபையில் அவசரகால நிலைமை பிரகடனம் செய்யப்பட்டுள்ளதாக அறிவித்தார்.

அவசர காலச் சட்டம் பிரகடனம் செய்யப்பட்டுள்ளதென்று அறிவித்த சபை முதல்வர் திரு. சி. பி. டி' சில்வா பின்வருமாறு சபையில் தெரிவித்தார்:-

"மின்சாரப்பகுதியினர்வேலைநிறுத்தம் செய்துள்ளதால் நாட்டின் சகல பகுதிகளும் மின்சாரத்தினால் துண்டிக்கப்பட்டிருக்கிறது. லக்சபான, கிருண்ட்பாஸ் ஆகிய இடங்களிலுள்ள மின்சார நிலையங்கள் வேலை செய்யவில்லை. கல்லோயாவிலிருந்து வரும் 9,000 கிலோ வோட்ஸ் சக்தி கொண்ட மின்சாரமும் தடைப்பட்டுள்ளது. கல்லோயாவிலுள்ள மின்சார உற்பத்தி நிலயத்தில் வேலை நடைபெறவில்லையா என்பது தெரியவில்லை.

மின்சாரப் பகுதியினரின் வேலைநிறுத்தத்தினால் பல அத்தியாவசியமான சேவைகள் ஸ்தம்பித்து விட்டன. தந்தி தொடர்புகள், துறைமுகத்தில் கப்பல்களிலிருந்து ஏற்றுமதி இறக்குமதி வேலைகளும் ஸ்தம்பிதது விட்டன.

வியாங்கொடையில் உள்ள நெசவாலையிலும் மற்றும் பல தொழிற்சாலைகளில் நடைபெறும் வேலைகளும் தற்பொழுது ஸ்தம்பிதம் அடைந்துள்ளன. மின்சாரப் பகுதியினரின் வேலைநிறுத்தத்தினால் ஏற்பட்டுள்ள நிலைமையைச் சமாளிக்கும் பொருட்டே அவசரகாலச் சட்டம் பிரகடனம் செய்யப்பட்டுள்ளது."

திரு. பீட்டர் கெனமனின் கேள்வி யொன்றுக்கு திரு. சி. பி. டி' சில்வா பதிலளிக்கையில்; நாட்டிலுள்ள சகல மின்

(2-ம் பக்கம் பார்க்க)

## கிரேக்க மன்னர் காலமானார்

லண்டன், மார்ச் 6

கிரேக்க மன்னர் போல் இன்று தமது 62-வது வயதில் காலமாகிவிட்டார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

### நல்வாக்கு

பாவத்திலிருந்து நாம் விடுதலை பெற வேண்டுமென்று எவ்வளவு விரும்புகிறோமோ, அவ்வளவு நாம் விடுதலை பெறுவோம். அதாவது நாம் விரும்புமளவுக்கு நாம் விடுதலை பெறுவோம்.

— ஓர் அறிஞர்


ஈழநாடு

EELA NADU

ELANADU: National Tamil Daily Post Box 49, Jaffna
Telegrams EELA NADU Jaffna
Phone 389

யாழ்ப்பாணம் சோபகிருது ஆண்டு
மாசி மீ 24 உ (7-3-64)


## அவசரகாலம்

மீண்டும் அவசரகாலத்தை அரசாங்கம் பிரகடனம் செய்ய வேண்டியேற்பட்டுள்ளது. மக்களுக்கு மிக அத்தியாவசிய சேவைகளில் ஈடுபட்டவர்கள் திடீர் வேலைநிறுத்தங்கள் செய்த காரணமாகவே இப்பிரகடனம் செய்ய வேண்டியதாயிற்று. இதைப் பிரகடனம் செய்ததும், மின்சார இஞ்சினியர்களின் வேலைநிறுத்தம் நின்று மக்களுக்கு மின்சாரம் கிடைத்தது பெரிய ஆறுதலாகும். இதேபோல் ஆஸ்பத்திரி முதலிய சேவைகளில் ஏற்பட்டுள்ள வேலைநிறுத்தங்களும் முடியுமென்றே எதிர்பார்க்கப்படுகிறது.

அரசாங்க சேவையில் ஈடுபட்டவர்களுக்குச் சில நியாயமான குறைகளிருக்கலாம். ஆனால் அவர்கள் மக்களுக்கு மிக அத்தியாவசிய சேவை செய்வதால், வேலைநிறுத்தம் செய்வதை பொதுமக்கள் எந்த நிலையிலும் விரும்பி ஆதரிக்க மாட்டார்கள். தங்கள் குறைகளை அவர்கள் பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்த்துக் கொள்ள முற்படுவதே விவேகமாகும். இதற்கான முயற்சிகளை இருதரப்பினரும் செய்து, இப்பிரச்னைகளைக் கண்ணியமான முறையில் தீர்க்க வேண்டியது அவசியம். இப்போது பிரகடனம் செய்யப்பட்டுள்ள அவசரகாலம் வீணாக அதிகம் நீடிக்காமல் சீக்கிரத்தில் ஒரு முடிவுக்குக் கொண்டுவரஆவன செய்யப்படுமென்றே நம்பப்படுகிறது.

## இளம் விவசாயிகள்

யாழ்ப்பாணம் நாவலர் இளம் விவசாயிகள் கழகத்தினர் இன்று ஏழாவது தமது ஆண்டு விழாவைக் கொண்டாடுகின்றனர். கோழி வளர்ப்பு, கால்நடைவளர்ப்பு, வீட்டுத்தோட்டம் ஆகியவைகளில் கழகம் அடைந்துள்ள முன்னேற்றத்தை 'இளம் உழவன்' என்ற அவர்களது ஆண்டுமலரில் சுருக்கமாகத் தெரிவித்துள்ளனர்.

விவசாயத்தைப் பற்றியும் உழவுத்தொழிலின் சிறப்பைப் பற்றியும் பெரிதாகப் பேசுவோர் மலிந்துள்ள இக்காலத்தில் படித்த வாலிபர்கள் இத்தொழிலில் ஈடுபட்டுள்ளது பலருக்கும் முன்மாதிரியாகும். நாட்டிற்குத் தேவையான உணவுப் பொருள்களுக்கு வெளிநாடுகளின் தயவை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம். இதற்காகப் பெருந்தொகையான பணம் வெளிநாடுகளுக்குச் செல்கிறது.

ஒருகாலத்தில் ஆசியாவின் நெற்களஞ்சியமாக விளங்கிய நமது நாடு இன்று உணவுப் பொருள்களுக்காக அந்நிய நாடுகளை எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் துரதிருஷ்டமான நிலை ஏற்பட்டதற்கு அந்நியரின் ஆட்சி மீது பழியைப் போடலாமென்றாலும் நமது சோம்பல்தான முழுமுதற் காரணமெனக் கூறுவது தவறாகாது. நமது நாட்டில் நிலவளம் இருக்கிறது; ஆள்பலமும் உண்டு. ஆனாலும் நாற்காலி உத்தியோகத்தில் கொண்ட மோகம் இன்னும் நம்மை விடவில்லை. இந்த மோகத்தினால்தான் கிடைக்கும் வசதிகளைக்கூட சரிவரப் பயன்படுத்தாமல் இன்னும் உத்தியோகத்துக்காகவே ஏங்கிக் கொண்டிருக்கிறோம்.

என்றாலும் இப்பொழுது நிலைமை சற்றே மாறி வருவது மகிழ்ச்சியளிக்கிறது. இனியும் அரசாங்க உத்தியோகத்தை நம்பிக் கொண்டிருப்பதில் பயன் இல்லை என்பதை நமது வாலிபர்கள் உணர்ந்து வருவது எதிர்காலத்திற்கு நம்பிக்கையளிப்பதாகவுள்ளது. படித்த வாலிபர்கள் சிலர் தான் விவசாயத்தில் ஈடுபட்டுள்ளனர். வேலையற்றிருக்கும் பெருந்தொகையான நமது வாலிபர்கள் நாற்காலி உத்தியோக மோகத்தைக் கைவிட்டு விவசாயம், கைத்தொழில்களில் தீவிரமாக ஈடுபடத் தொடங்கினால் நமது நாடும் சமூகமும் சுபிட்சப் பாதையில் காலடி எடுத்துவைக்குங்காலம் தூரத்திலிருக்காது. விஞ்ஞானத்தின் துணைகொண்டு மேற்கு நாடுகளில் பாலைவனங்கள் சோலைவனங்களாக மாறிவரும் இக்காலத்தில் நம்மிடையேயுள்ள படித்த வாலிபர்கள் மனம் வைத்து உழைத்தால் நாட்டில் உணவு உற்பத்தி பெருகுவதில் சிரமம் இருக்காது.

பல பிரச்னைகள் இருப்பினும் நாட்டின் உணவு உற்பத்தியை பெருக்கவும் கைத்தொழில்களை விருத்தி செய்யவும் அரசாங்கம் அளிக்கும் சிறு வசதிகளையும் சலுகைகளையும் பயன்படுத்திக்கொள்ள வேண்டியது நமது வாலிபர்களின் கடன். நமது நாட்டினதும், சமூகத்தினதும் எதிர்காலம் இளம் விவசாயிகள் கையில்தான் தங்கியுள்ளது. நமது இளைஞர்களுக்கு நாவலர் இளம விவசாயிகள் கழகம் மேலும் வழிகாட்டுமென்று நம்புவோம்.

## "தேவாரம் திருவாசகம் கற்க வேண்டும் தமிழரின் விமோசனத்திற்கு இதுவே சிறந்த வழி"

சாவகச்சேரி, வெள்ளி

"தைரியம் படைத்த தமிழர் நம்மிடையே அருகிவிட்டனர். ஒரு சிலர் இலைமறை காய் போல் கட்சிப்பூசலில் அகப்பட்டுக்கிடக்கின்றனர். இதனால் தான் தமிழினம் எண்ணியவற்றைப் பெற்றுக் கொள்ளமுடியாது திணறுகின்றது" என்று சாவகச்சேரி சைவசமய வளர்ச்சிச்சங்க ஆதரவில் வாரிவனநாத சிவன் கோவிலில் நடைபெற்ற திருவள்ளுவர் தினவிழாவில், மகாதேவ ஆச்சிரம தலைவர் ஸ்ரீமத் வடிவேல் சுவாமிகள் தலைமை தாங்கி உரை நிகழ்த்துகையில் கூறினர்.

திருவள்ளுவர் திருவிழாவை பிரம்மஸ்ரீ ப. மகாகணபதி சர்மா ஆரம்பித்து வைத்தார்.

வடிவேல் சுவாமிகள் மேலும் பேசுகையில் அந்நிய நாகரிகத்தில் மூழ்கிய தமிழர், தேவாரம், திருவாசகம், திருக்குறள் போன்றவற்றைக் கற்காது எப்பொழுது அவற்றைக் கைவிட்டனரோ அப்பொழுதே அழிவுப்பாதைக்கு அடியெடுத்துவைத்துக்கொண்டனர் என்றும் விமோசனம் தேடவேண்டுமேயாகில் தமிழர் தம் பழைய நாகரிகத்தையும், பழமையையும் கைக்கொண்டு ஒழுகுவதோடு திருவள்ளுவர் போன்ற பெரியவர்களை நினைவுகூர விழா எடுக்கவும் வேண்டுமென்றும் கூறினர்.

### சமஸ்கிருதம்

சென்னை, மார்ச் 6

ஹிந்திக்குப் பதில் சமஸ்கிருதம என்பதைக் காட்டிலும், எஸ். எஸ். எல். ஸி.க்கு இஷ்டபாடமாக சமஸ்கிருதத்தைக் கற்றுக்கொள்வது நலமென முதன்மந்திரி திரு. பக்தவத்சலம் கூறினர்.

# அத்தியாவசிய சேவைகள் . . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சார என்ஜினியர்களும் இப்பொழுது வேலைநிறுத்தம் செய்கின்றனர் என்றும் மின்சாரத் தொழிலுள்ள சகல தொழிற் சங்கங்களும் இவர்களுக்கு ஆதரவு தெரிவித்துள்ளனர் என்றும் கூறினர்.

**பார்லிமெண்டில் என்றுமில்லா காட்சி**

மின்சாரப்பகுதியினர் நேற்று திடீர் வேலைநிறுத்தம் செய்ததால் பாதிக்கப்பட்ட பலவற்றுள் ஜனப்பிரதிநிதிகள் சபையும் அடங்கும். ஜனப்பிரதிநிதிகள் சபை நேற்றுக் கூடிய பொழுது அங்கு மின்சார விளக்குகள் எரியவில்லை. காதுகளில் பொருத்தப்படும் ஒலிவாங்கிகள் இயங்கவில்லை குளிர் சாதனங்கள் இயங்காததால், சபையிலுள்ள சகல கதவுகளும் திறந்து வைக்கப்பட்டிருந்தன. சபை கூடியதை அங்கத்தவர்களுக்கு அறிவிக்கும் பொருட்டு நேற்று சேவகர் ஒருவர் சபையின் நான்கு மூலைகளிலும் மணியடித்தார். இதுவழக்கத்துக்கு மாறாக நடைபெற்ற சில நிகழ்ச்சிகளாகும்.

கேள்வி நேரத்தின் பின்னர், திரு. ரூபர்ட் குணவர்த்தன சபைமுதல்வரிடம்; அவசரகாலச் சட்டம் பிரகடனம் செய்யப்பட்டதா என்றும் இது உண்மையாயின் எப்பொழுதிலிருந்து அவசரகாலச் சட்டம் பிரகடனம் செய்யப்பட்டது என்றும் கேட்ட பொழுது; அவசர காலச்சட்டத்தைப் பிரகடனம் செய்யும்படி கவர்னர் ஜெனரலுக்கு மந்திரிசபை சிபார்சு செய்துள்ளதென்று கூறினர்.

அவசரகாலச் சட்டம் பிரகடனம் செய்யப்படும் நேரத்தை அறிவிக்கும்படி எதிர்க்கட்சியினர் கோரவே, சபாநாயகர் சபையை அரைமணி நேரம் வரை ஒத்திவைத்தார். 30 நிமிடங்களுக்குப் பின்னர் சபை மீண்டும் கூடியபொழுது; அவசர காலச் சட்டம் பிரகடனம் செய்யப்பட்டதை சபாநாயகர் அறிவித்தார்.

(தாமதித்துக் கிடைத்த செய்தி)

### கமிட்டிகள் நிறைந்த இலாகா

புதுடில்லி, மார்ச் 6

யூனியன் அரசாங்கத்திலுள்ள கணக்கற்ற கமிட்டிகளைபற்றி ராஜ்ய சபையில் அங்கத்தினர்கள் ஆத்திரமாகக் கேள்விகள் கேட்டார்கள்.

சுகாதார இலாகாவில் 696 கமிட்டிகள் இருப்பதாக மந்திரி கூறினர்.

இந்தக் கமிட்டிகளின் வேலைகளைக் கவனித்துக்கொள்ள ஒரு தனி இலாகா நியமிக்கப்படுமா என ஒரு அங்கத்தினர் கேட்டார்.

### கிராம முன்னேற்றச் சங்க வருடாந்தக் கூட்டம்

தொல்புரம், வெள்ளி

தொல்புரம் கிராம முன்னேற்றச் சங்கத்தின் 15-ம் வருடாந்தப் பொதுக் கூட்டம் தொல்புரம் விக்கினேஸ்வர வித்தியாசாலை மண்டபத்தில் சங்கத்தலைவர் திரு. அ. தையல்பாகர் ஜே. பி. தலைமையில் நடைபெற்றது.

புதுவருட உத்தியோகத்தர் தெரிவு வருமாறு:-

போஷகர்: கார்த்திகேசு, தலைவர்: அ. தையல்பாகர் ஜே. பி., உபதலைவர்கள்: சி. பரமலிங்கம், கோ. கிருஷ்ணர், காரியதரிசி: ந. குமாரசாமி, உபகாரியதரிசி: வேலுப்பிள்ளை, தனாதிகாரி: சி. யோ. கந்தையா, பின்வருவோர் நிர்வாக உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்: ச. கயிலாயபிள்ளை, மு. கிருஷ்ணபிள்ளை, க. அப்புத்துரை, கு. கணபதிப்பிள்ளை, மு. நடராசா, சி. வரதராசா, அ. திருநாவுக்கரசு, க. அழகுப்பிள்ளை, த. பரமேஸ்வரன்.

தொண்டர் இயக்கம், சமாதான மன்றம் நிறுவுவதென்றும் சபையில் தீர்மானிக்கப்பட்டுக் கிராமத்துக்குரிய பல ஆக்கவேலைகள் பற்றியும் ஆலோசிக்கப்பட்டது.

### ஹிந்தியும் பப்ளிக் சர்வீஸ் கமிஷனும்

புதுடில்லி, மார்ச். 6

யூனியன் பப்ளிக் சர்வீஸ் கமிஷன் பரீட்சைகளில் ஹிந்தியை உபயோகிப்பது சம்பந்தமாக இறுதி முடிவு செய்வதற்குமுன், யூனியன் அரசாங்கம் ராஜ்ய முதன் மந்திரிகளைக் கலந்தாலோசி என உள்நாட்டு மந்திரி திரு. நந்தா லோகசபையில் கூறினர்.

"இந்த விஷயம் இன்னும் பரிசீலனையில் தான் இருக்கிறது. இந்தப் பிரச்னையில் அக்கறையுள்ள எம். பி. க்கள் கலந்தாலோசிக்கப் பட்டிருக்கிறார்கள். மேலும் பரிசீலனை நடக்கும்" என்றும் அவர் கூறினர்.

### இளம் விவசாயிகள் ப. நோ. கூ. சங்கம்

கச்சாய், வெள்ளி

மீசாலை இளம் வாலிபரின் முன்னேற்றத்தை அடிப்படையாகக் கொண்டு மீசாலை விக்கினேஸ்வரா மகாவித்தியாலய மண்டபத்தில் அதிபர் திரு. எஸ். கே. நம்பியாரின் தலைமையில் மீசாலை இளம் விவசாயிகள் பல நோக்குக் கூட்டுறவுச் சங்க அங்குரார்ப்பணக் கூட்டம் நடைபெற்றது. அதிபர் தமது தலைமையுரையில் இச்சங்கம் கரைச்சிப்பகுதியில் சிறுபோக, காலபோக நெற்செய்கை, பழமரம் நாட்டல், காய்கறித் தோட்டம், கைத்தொழில் வியாபாரம் முதலியவற்றில் இளைஞர்களை ஊக்கம் செலுத்துமாறு தூண்டுவதால் அவர்கள் மத்தியில் இன்றுள்ள சூழ்நிலையில் தோன்றியுள்ள வேலையில்லாத் திண்டாட்டத்திற்கு முற்றுப்புள்ளி காண இது ஒரு சிறந்த கருவியாக இருக்கும் என்று கூறினர்.

### முத்தமிழ் கலைவிழா

கொழும்பு, வெள்ளி

சிவசக்தி கலை அரங்கினர் அளிக்கும் முத்தமிழ் கலைவிழா பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் மார்ச் மாதம் 13 14, 15 ஆகிய நாட்களில் நடைபெறவிருக்கின்றது.

### அருப்புக்கோட்டை தேர்தல்

புதுடில்லி, மார்ச் 6

தமிழ்நாட்டில் அருப்புக்கோட்டை பார்லிமெண்ட் தொகுதிக்கு லோகசபாவில் அங்கத்தினராகப் பதவி வகித்த ஸ்ரீ உ. முத்துராமலிங்கத் தேவர் காலமானதையொட்டி ஏற்பட்டுள்ள காலி ஸ்தானத்திற்கு அங்கத்தினர் ஒருவரைத் தேர்ந்தெடுப்பதற்காக உப-தேர்தல் நடைபெறவிருக்கிறது. வருகிற 10-ந் திகதி நியமனப்பத்திரங்கள் தாக்கல் செய்யப்படுமென்றும் ஏப்ரல் 15-ந் திகதி வாக்கெடுப்பு நடைபெறுமென்றும் அறிவிக்கப்படுகிறது.

(5-ம் கலத் தொடர்ச்சி)

* * *

நிலையவன்காண் தோற்றவன்காண் நிறையானுன்காண் நீரவன்காண் பாரவன்காண் ஊர்மூன்றெய்த, சிலையவன் காண் செய்யவாய்க்கரிய கூந்தல் தேன்மொழியை ஒருபாகம் சேர்த்தினுன்காண் கலையவன் காண் காற்றவன்காண் காலன்வீழக்கறுத்தவன் காண் கயிலாயமென்னுந் தெய்வ, மலையவன்காண் வானவர்கள் வணங்கியேத்தும் வலிவலத்தான் காணவனென் மனத்துளானே.

—திருநாவுக்கரசர்.

## ஐயாறன் எழுதுவது

மின்சாரம் நின்றுவிட்டதே, 'ஈழநாடு' வெளிவருமா என்று முந்தாநாள் பல அன்பர்கள் கவலையுடன் கேட்டனர். நேற்றுக் காலையில் இங்கு பத்திரிகை வழக்கம் போல் வந்ததும் பலருக்கும் ஆச்சரியம். மின்சார சக்தியில்லாமல் எப்படிப் பேப்பர் வெளியிட்டீர்கள் என்று பலரும் கேட்டனர்.

இப்போதுள்ள காகித விலையிலும், பலபல இக்கட்டுகளிலும் யாழ்ப்பாணத்திலிருந்து தினசரி சுடச்சுட பல செய்திகளையும் அளித்துக் கொண்டு 'ஈழநாடு' தவருமல் வெளிவரும் விபரங்களை வெளியிட்டால் பலருக்கும் அதிக ஆச்சரியமாகவிருக்கும். இது எப்படி முடிகிறதென்பதைப் பற்றி நினைக்கும்போது எனக்கே ஒன்றும் புரியவில்லை.

நமக்கு அப்பால் உள்ள ஒரு தெய்வசக்தி தான் துணை நின்று இயக்கிக்கொண்டு போகின்றதென்பதைத் தவிர வேறு எதுவும் கூறத்தெரியவில்லை. தெய்வ அருள் ஒன்று இருக்கிறதென்ற நம்பிக்கை இதனால் பலப்படுகின்றது.

* * *

இது மின்சார யுகம். மின்சக்தி நம் வாழ்க்கையிலே மிக முக்கிய இடம்பெற்றுவிட்டது. வெளிச்சம், காற்று, தண்ணீர், சுகாதாரம், கைத்தொழில் எல்லாவற்றுக்குமே மின்சக்தியை நம்பி வாழவேண்டிய நிலையில் நாம் இருக்கின்றோம்.

ஒரு வாரத்துக்கு மேல் ஆஸ்பத்திரி டாக்டர்கள் வேலைநிறுத்தம் செய்தனர். அவசரகாலத்தைப் பிரகடனம் செய்யவேண்டிய அவசியமேற்படவில்லை. ஆனால் மின்சார இஞ்ஜினீயர்கள் 'ஸ்டிரைக்' செய்த ஒருசில மணி நேரத்தில், அவசரகாலத்தைப் பிரகடனம் செய்யவேண்டியேற்பட்டுவிட்டது. டாக்டர்களைவிடத் தாங்களே அதிக முக்கியமானவர்களென்று இப்போது இஞ்ஜினீயர்கள் தங்களைப் பற்றி மிகப்பெரிதாக மதித்துக்கொள்ளக்கூடும்!

* * *

மின்சாரவிளக்கு நின்றதும் மண்ணெண்ணெய், தேங்காய் எண்ணெய் விளக்குகளுக்கும் மெழுகுவர்த்திக்கும் திடீரென அதிக கிராக்கி ஏற்பட்டது. பழங்கால எளிய வாழ்க்கைக்கு என்றும் அழிவில்லை என்று பலரும் வாய்விட்டுக் கூறினர். எவ்வித நிலைக்கும் தன்னை தகுந்தபடி 'அட்ஜஸ்ட்' செய்து கொள்ளக்கூடிய பெரிய குணம் மனிதராகிய எமக்கு இருக்கிறதல்லவா?

ஆனால் மின்விளக்குகள் ஏன் நின்றன என்ற சமாச்சாரம், நமது நாய்களுக்குப் புரியவில்லை போலும். இரவெல்லாம் 'வெள் வெள்' என்று குரைத்துக்கொண்டே இருந்தன!

மின்வெளிச்சமில்லாவிடினும், நல்ல வேளையாக நிலாவெளிச்சமிருந்தது.

* * *

இதுவரை எளியமக்கள்தான் ஸ்டிரைக் செய்துவந்தார்கள். இப்போது டாக்டர்கள், இஞ்சினியர்கள் போன்ற 'பெரிய மனிதர்'களும் ஸ்டிரைக் செய்ய ஆரம்பித்துவிட்டதைப் பார்க்கின்றோம். இந்த 'ஸ்டிரைக்' தொத்து நோய் பரவுவதைப் பார்க்கையில் சூரியன், சந்திரன் இவர்களும்கூட இனி 'ஸ்டிரைக்' செய்துவிடுவார்களோ என்று தோன்றியது.

பாவம்! சூரிய சந்திரர்கள் ஒரு விநாடி தவருமல் எவ்வித சம்பளமும் கேட்காமல், லீவு எடுக்காமல், வாய் முணுமுணுக்காமல் எவ்வளவு காலமாக நமக்குத் தொண்டாற்றி வருகிறார்கள்! அவர்களைப் பார்க்கும்போது நமக்கு மிகவும் பரிதாபமாக இருக்கிறதல்லவா!

(4-ம் கலம் பார்க்க)

# கச்சாய் கிராம சபை தேர்தல்: அபேட்சாபத்திரங்கள் தாக்கல்

## இருவா போட்டியின்றி தெரிவு

கச்சாய், வெள்ளி

கச்சாய் கிராம சபையின் தேர்தலுக்கான அபேட்சா பத்திரங்கள் இன்று பி. ப. 2 மணியளவில் உதவித் தேர்தல் அதிகாரி திரு. எம். எஸ். ராஜசிங்கம் முன்னிலையில் தாக்கல் செய்யப்பட்டன.

5-ம் வட்டாரத்துக்கு கந்தையா குமாரவேலுவும், 7-ம் வட்டாரத்துக்கு வல்லிபுரம் சின்னத்தம்பியும் போட்டியின்றித் தெரிவு செய்யப்பட்டனர்.

தேர்தல் சின்னங்களைத் தேர்ந்தெடுப்பதில் அபேட்சகர்களிடையே கடும் போட்டியிருந்தது.

போட்டியிடும் அபேட்சகர்கள் விபரம் வருமாறு:-

**1-ம் வட்டாரம்**

ஆ. கனகரத்தினம் (தராசு), அ. குலசேகரம்பிள்ளை (மணி), க. தர்மலிங்கம் (சைக்கிள்).

**2-ம் வட்டாரம்**

வே. நடராசா (தராசு), அ. ஞானப்பிரகாசம் (சைக்கிள்), பி. அருளானந்தம் (கண்).

**3-ம் வட்டாரம்**

அ. வெற்றிவேலு (சைக்கிள்), க. செல்லத்துரை சூரியன்).

**4-ம் வட்டாரம்**

பொ. கணபதிப்பிள்ளை (சூரியன்), செ. சின்னப்பு (சைக்கிள்).

**8-ம் வட்டாரம்**

ந. சிதம்பரப்பிள்ளை (சைக்கிள்), வ. கனகரத்தினம் (சூரியன்), க. முத்தையா (மணி)

**5-ம் வட்டாரம்**

க. சுப்பிரமணியம் (தராசு). அ. த. சிதம்பரப்பிள்ளை (சைக்கிள்).

**9-ம் வட்டாரம்**

இ. செல்லையா (மணிக்கூடு), ஆ. பொன்னையா (தராசு), ... முருகன் (சைக்கிள்).

**10-ம் வட்டாரம்**

கை செல்லையா (தராசு), வே. சின்னத்தம்பி (சைக்கிள்).

**11-ம் வட்டாரம்**

க. கனகசபை (சேவல்), தி. முத்து (தராசு), வ. கந்தையா (சைக்கிள்).

## ராஜாஜி அப்பீலால் ரூ. 16 ஆயிரம் நஷ்டம்

சென்னை, மார்ச் 6

ராஜாஜி அப்பீல் மீது சுப்ரீம் கோர்ட் அளிக்க தீர்ப்பின் விளைவாக, சென்னை கார்ப்பரேஷனுக்கு வருடம் ரூ. 16 ஆயிரம் நஷ்டம் ஏற்படும். சென்னை நகரிலுள்ள பென்ஷன்காரர்கள் மீது தொழில்வரி விதிக்க முடியாததால் இந்த நஷ்டம் ஏற்படும் நகரில் சுமார் 2000 பென்ஷன் தாரர்கள் இருப்பதாயும், இவர்கள் மூலம் ஏற்படும் வருமான நஷ்டம் சொற்பம் தானென்றும் தொழில் வரி மூலம் வருடத்திற்கு மொத்த வருமானம் ரூ. 16 லட்சமென்றும் கார்ப்பரேஷன் அதிகாரியொருவர் கூறினர்.

## 1966-க்குப் பின் யுதாண்ட் நீடிக்கமாட்டார்

நியுயோர்க், மார்ச் 6

ஐ. நா. பொதுக் காரியதரிசி யுதாண்டின் பதவிக் காலம் 1966-ல் பூர்த்தியாகிறது. அதன் பிறகு தன் பதவிக்காலத்தை நீடித்துக்கொள்ளும் உத்தேசம் தனக்கு இல்லையென யுதாண்ட் நிருபர்களிடம் கூறினர். தற்போதைய நிலையில் தென்வியட்னுமில் ஐ. நா. பயனுள்ள வகையில் தலையிடமுடியாதென்றும் அவர் கூறினர்.

## சுரங்க வெடி விபத்தில் 26 பேர் பலி

ரியோடிஜெனிரோ, மார்ச் 6

ரியோடிஜெனிரோ மாகாணத்தைச் சேர்ந்த இடாபோகாரா என்னுமிடத்தில் சுரங்க வெடிக கிடங்கில் அகஸ்மாத்தாக வெடிவிபத்து ஏற்பட்டதால் 26 பேர் உயிரிழந்தனர். பலர் காயமடைந்தனர்.

## பட்டம், ஆந்திரா கவர்னராவார்

புதுடில்லி, மார்ச் 6

பஞ்சாப் கவர்னர் ஸ்ரீ பட்டம்தாணுப்பிள்ளை ஆந்திர பிரதேசத்தின் கவர்னராக நியமிக்கப்படுவார் எனத் தெரிகிறது.

ஸ்ரீ பிள்ளையின் ஸதானத்திற்கு யூனியன் அரசாங்கத்தின் மாஜி பாசன மந்திரி ஸ்ரீ ஹபீஸ் முகமது இப்ராஹிம நியமனம் செய்யப்படுவார் எனத் தெரிகிறது.

ஆந்திர பிரதேசத்தின் கவர்னரான ஸ்ரீ நாகேஷ் மைசூர் கவர்னராக மாற்றப்படுவார்.

மைசூர் மகாராஜா சென்னை கவர்னராவார்.

## யுதாண்ட் இந்திய விஜயம் ஏப்ரலில் இல்லை

நியுயோர்க், மார்ச் 6

இவ்வாண்டு மார்ச், ஏப்ரல் மாதங்களில் இந்தியாவுக்கு விஜயம் செய்வதாக ஐ. நா. பிரதம காரியதரிசி யுதாண்ட் திட்டமிட்டிருந்தார். அவரது விஜயம் பின்னுல் ஒரு திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டதாகத் தெரிகிறது. இன்னும் திகதி நிர்ணயிக்க இயலவில்லையென அவர் கூறினர்.

## 113 ஆஸ்பத்திரிகளுக்கு டாக்டர்கள் இல்லை

புவனேஸ்வரம், மார்ச் 6

ஒரிஸாவில் 113 ஆஸ்பத்திரிகள், வைத்தியசாலைகள், பிரைமரி சுகாதார நிலையங்கள் ஆகியவை டாக்டர்கள் இன்றி நடந்து வருவதாக சுகாதார மந்திரி திரு ஜகன்நாதராவ் கூறினர் இதில் 45 ஆஸ்பத்திரிகளுக்கு கடந்த இரு ஆண்டுகளாகவும், 10 ஆஸ்பத்திரிகளுக்கு ஒரு வருட காலமாகவும் 41 ஆஸ்பத்திரிகளுக்கு 6 மாத காலமாகவும் டாக்டர்கள் இல்லை என அவர் கூறினர்

## மத்தியஸ்தத்தை பாக். கோரும்

வாஷிங்டன், மார்ச் 6

அமெரிக்க உதவி வெளிநாட்டு மந்திரி திரு. டால்போட் கராச்சிக்கு விஜயம் செய்யும் போது காஷ்மீர் பிரச்னைக்கு மத்தியஸ்த யோசனையை பாகிஸ்தான் மீண்டும் கிளப்பலாம் என எதிர்பார்க்கப்படுகிறது மத்தியஸ்த் யோசனையை அமெரிக்கா ஆதரிக்கிறது.


ஹார்லிக்ஸ் அளிக்கும் நன்மைக்கு ஒரு உதாரணம்:

எங்கள் இல்லற வாழ்வு கசந்தது

தளர்ச்சியும் எரிச்சலும் மேலிட வாழ்வில் வெறுப்புத் தட்டியது





நாள் செல்லச் செல்ல எங்களைப் பிணைத்திருந்த அன்புத் தளை தளர்ந்து இருவருமே தனிமையை நாட ஆரம்பித்தோம். இன்பம் நிலவ வேண்டிய இல்லற வாழ்வில் துன்பத்தின் சாயை படர்ந்தது.


ஒரு நாள் டாக்டரின் ஆலோசனையைக் கேட்டதில் எங்களுக்கு நல்ல காலம் பிறந்தது. டாக்டர், சொன்னர்: "சோர்வுப்பிணி, சிடுசிடுப்பு இவை பெரும்பாலும் பலவீனத்தின் அறிகுறிகள்.


தினம் தவறுமல் ஹார்லிக்ஸ் அருந்தி வந்தால் இழந்த சக்தியை மீண்டும் பெற்று சுறுசுறுப்புடன் இருக்க முடியும்."


ஆரம்பத்தில் குணம் சற்று தவக்கமாய்த் தான் தெரிந்தது. பிறகு எங்கள் குடும்ப வாழ்வில் பரவியிருந்த இருள் விலகியது என்று பளிச்செனப் புலனுகியது. பழைய சுறுசுறுப்பும் மகிழ்ச்சியும் ஏற்பட்டன.



ஹார்லிக்ஸ் அளித்த நற்பலனிஞல் எங்கள் குடும்பத்தில் அமைதி நிலவியது. ஹார்லிக்ஸ் அளிக்கும் புத்துணர்ச்சியை உணர்ந்துள்ள நாங்கள் மீண்டும் பழைய பரிதாப நிலைக்கு உள்ளாக மாட்டோம்!

ஹார்லிக்ஸ் அதிக சக்தி யளிக்கிறது!


## வரி விளம்பரம்

**தொய்வு, நீரிழிவு**

குணப்படுத்த உத்தரவாதம் மந்திரிமார், அரசியற் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்ற விபரங்கள் அடங்கிய கற்றலோக் இனும். தொய்வுக்கு 10 நாள் மருந்து 12/50 நீரிழிவுக்கு 10 நாள் மருந்து 10/50 வைத்தியர் பரிபூரணானந்தர் கைலாயபிள்ளையார் கோவிலடி யாழ்ப்பாணம்.

**விற்பனைக்கு**

பேர்மிங்ஹாம் இரும்புப் பெட்டி (Iron Safe) நல்ல நிலையில் உள்ளது. தொடர்பு கொள்க: 110, பிரதான வீதி, யாழ்ப்பாணம். 18

**தேவை**

மலசலகூடத் தொழிலாளர்கள் தேவை. 15-3-64-க்கு முன்னர் காரியதரிசி, கூட்டுறவு ஆஸ்பத்திரி, மூளாய் என்ற விலாசத்திற்கு நற்சாட்சிப்பத்திரப் பிரதிகளுடன் மட்டும் விண்ணப்பிக்கவும்.
21

ஆஸ்பத்திரி துணிகள் கழுவுவதற்கு கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன. கேள்விதாரர்கள் பிணை கட்ட ஆயத்தமாக இருக்கவேண்டும். ஒரு துண்டு கழுவுவதற்குரிய தொகையைக் குறிப்பிட்டு, காரியதரிசி, கூட்டுறவு ஆஸ்பத்திரி, மூளாய் என்ற விலாசத்திற்கு 15-3-64-க்கு முன்னர் விண்ணப்பிக்கவும்.
108

**To Let**

Large room suitable for office, business premises, Stores etc. Apply 11, Momsac building, Stanley Road, Jaffna. 22.

## அத்தியாவசிய...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வும்.

பாடம்செய்தல், உற்பத்தி, விற்பனை, தேயிலை, ரப்பர், தேங்காய் போன்றவற்றை கப்பலில் ஏற்றுதல் அல்லது சேமித்தல் ஆகியனவும்.

ஆஸ்பத்திரிகளில் உணவளித்தல், சிகிச்சையளித்தல், வைத்தியவிடுதிகள், டிஸ்பென்சரிகள் இதுபோன்ற மற்றும் அரசாங்கத்தினுல் அல்லது வேறுவகையில் நடத்தப்படும் ஸ்தாபனங்களும்.

ஸ்தலஸ்தாபனங்களின் பொறுப்பிலுள்ள நகரசுத்தி வேலைகள் போன்றவையும்

ரஸ்தா, ரயில், விமானப்போக்குவரத்துக்களும் பராமரித்து மேற் கொள்ளப்பட வேண்டும்.

8. எந்த அரசாங்க இலாகாவின் வேலைகளும் அவற்றின் கிளை வேலைகளும்.

9. கூ. மொ. வி. ஸ்தாபனம், இ. போ. ச; துறைமுக கார்ப்பரேஷன் ஆகியன.

10. இலங்கை மத்தியவங்கி; இலங்கை வங்கி உட்பட வர்த்தக, நிதி விவகாரங்களைக் கையாளும் சகல சேவைகளும்.

11 இறக்குமதி, ஏற்றுமதி, விற்பனை, சப்ளை, விநியோகம் ஆகியவற்றை மேற்கொண்டிருக்கும் வர்த்தக ஸ்தாபனங்களின் வேலைகளும் அத்தியாவசிய சேவைகளாக்கபட்டுள்ளன.

12. இந்த உத்தரவு இலங்கை பூராவுக்கும் பொருந்தும்.

## சீர்திருத்தம்

புதுடில்லி, மார்ச் 6

செகண்டரிக் கல்வியை மாற்றியமைப்பதற்காக கல்வி மந்திரி திரு. எம். ஸி. சக்ளா சமர்ப்பித்த திட்டமொன்றுக்கு திட்டக் கமிஷன் ஆதரவுகாட்டியுள்ளதாகத் தெரிகிறது. இதை நிறைவேற்ற ரூபா 20 கோடி விசேஷ நிதி ஒன்றைத் தோற்றுவிக்குமாறு திட்டக் கமிஷனை அவர் கேட்டிருக்கிறார்.

## நம்பிக்கையில்லாத்தீர்மானம்

### பட்டினசபையில் இன்று விவாதம்

மாவிட்டபுரம், வெள்ளி

காங்கேசன் துறைப் பட்டின சபையின் உபதலைவர் திரு. சு. கிருபாமூர்த்திமீது நம்பிக்கையில்லையென்றும் அவரைப் பதவிநீக்கம் செய்வது சம்பந்தமாக விவாதிக்க பட்டின சபையின் விசேஷக் கூட்டத்தைக் கூட்டும்படியும் கோரி சபையின் மூன்று அங்கத்தவர்கள் தலைவரை எழுத்து மூலம் கேட்டுக் கொண்டதற்கிணங்க சபையின் விசேஷ கூட்டம் சனிக்கிழமை காலை 10 மணிக்கு நடைபெறுமென சகல அங்கத்தவர்களுக்கும் தலைவர் அறிவித்துள்ளார்.

இக்கூட்டத்தைக் கூட்டும்படி திருவாளர்கள் வி. இரத்தினராசா, எஸ். சிவன்டியார், கே. வயித்திலிங்கம் ஆகியோர் கேட்டுள்ளார்கள்.

## நடுநிலைமை மகாநாடு: இந்தோனேஷியா கருத்து

கராச்சி, மார்ச் 6

கோஷ்டிசேரா நாடுகளின் மகாநாட்டைக் கூட்டிய நாடுகளில் இந்தோனேஷியாவும் ஒன்ருய் இருந்ததால் அதைப் போல் மற்ருெரு மகாநாடு கூடுவதை முறியடிப்பதில் இந்தோனேஷியாவுக்கு நம்பிக்கையில்லை என அந்நாட்டின் வெளிநாட்டு மந்திரி டாக்டர் சுபந்திரியோ 'டான்' நிருபரிடம் கூறினுர். கொழும்பில் கூடும் தூதர்கள் பேச்சின்போது ஆசிய ஆபிரிக்க மகாநாட்டின் நோக்கத்தை எடுத்துரைக்கப் போவதாய் அவர் கூறினுர்.

பல உருவங்களும், பலகருத்துக்களும் கொண்ட கோஷ்டி சேரா நாடுகள் எனச் சொல்லப்படும் கோஷ்டிகளுக்கிடையில் ஒற்றுமையைவிட, ஆசிய-ஆபிரிகக நாடுகளின் ஒற்றுமை தான் முக்கியம் என்றும் அவர் கூறினுர்.

## தொலைபேசி கம்பித் திருட்டு

மாவிட்டபுரம், வெள்ளி

சங்கானைப் பொலிஸ் பகுதியைச் சேர்ந்த காரைநகர் - யாழ்ப்பாணம் வீதியில் 8-வது-10-வது மைல் கட்டைக்கிடையில் 160 ருத்தல் தொலைபேசி வயர் திருடப்பட்டுள்ளதாக சங்கானைப் பொலிஸில் புகார் செய்யப்பபட்டுள்ளது.

அச்சுவேலியைச் சேர்ந்த வல்லை ரேூட்டிலும் பெரும் தொகையான தொலைபேசி வயர் களவு போய்விட்டதாக காங்கேசன் துறைப் பொலிஸில் புகார் செய்யப்பட்டுள்ளது.

## "மக்களின் உணர்ச்சிக்கு மதிப்பு தர வேண்டும்"

சென்னை, மார்ச் 6

"மொழிப்பிரச்னை சம்பந்தமாக நாட்டின் பல்வேறு பகுதிகளில் உள்ள மக்களின் உணர்ச்சிகளுக்கு பரஸ்பரம் எவ்வளவுதூரம் மதிப்புக் கொடுக்கிருேம் என்பதையே நாட்டின் ஒற்றுமை பொறுத்திருக்கிறது என்பதை முதன் மந்திரிகள் மகாநாட்டில் திரு. பக்தவத்சலம் தெளிவுபடுத்தத் தயங்கக்கூடாது" என சென்னை மேல்சபையில் எதிர்க்கட்சித்தலைவர் டாக்டர் ஏ லக்ஷ்மணசாமி முதலியார் கூறினுர்.

"முதன்மந்திரிகள் மகாநாட்டின் முக்கிய நோக்கங்களில் ஒன்று மொழிப்பிரச்னைபற்றி விவாதிப்பதே என பத்திரிகைகளில் கூறப்பட்டுள்ளது. சுமுகமான ஏற்பாட்டை விரும்பியபோதிலும் சில மொழி வெறியர்களின் எதிர்ப்பு அதிகரித்திருக்கிறது என்பதை வருத்தத்துடன் கூறவேண்டியிருக்கிறது.

ராஷ்டிரபதி குறிப்பிட்ட மொழியில் பேசாதலைத ஆட்சேபித்து லோகசபையில் சில பிரதிநிதிகள் வெளிநடப்பு செய்தது அதிர்ச்சியளிக்கிறது. மறுபடியும் அந்த வெறியர்களிடமிருந்து கிளம்பிய ஆட்சேபம் ராஷ்டிரபதியின் உரையில் முதலில் ஹிந்தியை உபயோகிக்க வேண்டிய நிலையில் முடிந்தது. இம்மாதிரி தீவிர நிலைமையை மேற்கொள்வது இவர்களுக்குத் தைரியமான செயலாகத் தோன்றலாம். ஆனுல் நாட்டின் தலைவர் இத்தகைய நிலைமைக்கு ஆளாக்கப்படுவது நமக்கெல்லாம் தலைகுனிவு தரும் அனுபவமாகும்" என்றும் டாக்டர் முதலியார் குறிப்பிட்டார்.

## கென்னடி நூல்நிலையம்

போஸ்டனில் அமைக்கப்படவிருக்கும் 'கென்னடி நூல்நிலை'யத்திற்கான கட்டிடத்துக்கு மாதிரி அமைத்துக் கொடுக்க 14 பிரபல கட்டிடக்கலை நிபுணர்கள் முன்வந்திருக்கின்றனர். அமெரிக்காவைச் சேர்ந்த 8 பேரும், மற்றும் ஆறு நாடுகளைச் சேர்ந்த 6 பேருமே இவர்கள்.

## சிவராத்திரி விழா

யாழ்ப்பாணம், வெள்ளி

தென்கோவை ஸ்ரீ பத்ரகாளி அம்பாள் ஸமேத ஸ்ரீ வீரபத்திரேஸ்வரர் தேவஸ்தானத்தில் வியாழக்கிழமை யன்று பகல் நவோத்தர சத சங்காபிஷேகமும், மாலை பஞ்சவிம்ஸதி கலச ஸ்நபனமும், அன்றிரவு திருவுலாவும், நான்கு ஜாமங்களிற்கும் ருத்ராபிஷேகமும், விசேஷ பூஜைகளும் நடைபெறும். சங்கீத கதா காலட்சேபங்களும், சொற்பொழிவும், கதம்ப இசையும் நடைபெற ஒழுங்குகள் செய்யப்படுகின்றன.

## நிலைமை...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

லக்ஸபான மின்சார நிலையத்திலும் சுன்னுகம் மின்சார நிலையத்திலும் சகல உத்தியோகஸ்தர்களும் வேலைக்குத் திரும்பியுள்ளதாக திரு. சி. பி. டி' அறிவித்தார்.

கொழும்பு மின்சார நிலையங்களிலுள்ள இயந்திரங்கள் போதிய மின்சாரம் விநியோகிப்பதற்குரிய வெப்பநிலை அடைவதற்கு சிறிது கால தாமதமாகும் என்பதால் மின்சார விநியோகம் தாமதமாகலாமெனவும் அவர் எடுத்துக் கூறினுர்.

## காவலாளியின் நஷ்ட ஈடு வழக்கு

யாழ்ப்பாணம், வெள்ளி

காங்கேசன்துறை சிமெந்துக் கார்ப்பரேஷன் மீது பத்தாயிரம் ரூபாய் நஷ்டஈடு கோரி காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற் கார்ப்பரேஷனின் முன்னுள் காவற்காரராக இருந்த திரு. வீரகத்தியார் கந்தசாமியினுல் தொடரப்பட்ட வழக்கு, அண்மையில் யாழ்ப்பாணம் கூட்டு மாவட்டநீதிபதி திரு. ஜி. ஸி. நைல்ஸ்முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

தம்மைப் பிழையான முறையிலும் சட்டவிரோதமாகவும் வேலைநீக்கஞ் செய்து தமக்கு நஷ்டம் விளைவித்ததாகவும் நஷ்டஈடாக தமக்கு 10,000 ரூபா சிமெந்துத் தொழிற் கார்ப்பரேஷன் கொடுக்கவேண்டுமென்றும் கோரி திரு. வீரகத்தியார் கந்தசாமி வழக்கைத் தாக்கல் செய்திருந்தார்.

வாதி தரப்பில் திருவாளர்கள் வி சுந்தரலிங்கம், வி.மகேசன் ஆகியோரின் அனுசரணையுடன் வழக்கறிஞர் திரு. டி. முத்துசாமிப்பிள்ளை ஆஜராஞர். விசாரணையின்போது சிமெந்து கூட்டு ஸ்தாபன நிரந்தரக் காரியதரிசி, காங்கேசன்துறை சிமெந்து கூட்டு ஸ்தாபன வேலைப்பகுதி மனேஜர், பந்தோபஸ்து அதிகாரி, காவலாளி வீரகத்தியார் கந்தசாமி ஆகியோர் சாட்சியமளித்தனர்.

இம்மாதம்20 திகதி தீர்ப்பு வழங்கப்படுமென்று நீதிபதி உத்தரவிட்டார்.

## இறுதிப் போட்டி முடிவு

உடுப்பிட்டி, வெள்ளி

உடுப்பிட்டி நாவலர் சனசமூக நிலைய "நவஜீவன்ஸ்" விளையாட்டுக் கழகத்தினரின் கரப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியின் சாம்பியன் தெரிவுப் போட்டியில் கலந்துகொண்ட இமையாணன் சிவானந்தன் விளையாட்டுக்கழகத்திற்கும் இமையாணன் இளைஞர் விளையாட்டுக் கழகத்திற்குமிடையே நடைபெற்ற போட்டியில் இமையாணன் இளைஞர் விளையாட்டுக்கழகம் சாம்பியனுகத்தெரிவுசெய்யப்பட்டது.

இப்போட்டிக்கு மத்தியஸ்தராக சிதம்பராக் கல்லூரி உப-அதிபர் திரு. எஸ். அரியரத்தினம் கடமையாற்றினுர். சாம்பியன் கழகத்திற்கான வெள்ளிக் கிண்ண பரிசளிப்புக்கூட்டம் உடுப்பிட்டி கிராமசபைத் தலைவர் திரு. ஆர். ஆர். தர்மரத்தினம் தலைமையில் நடைபெற்றது.

## தற்கொலை முயற்சி

### ரூ. 250 பிணையில் செல்ல உத்தரவு

மாவிட்டபுரம், வெள்ளி

காங்கேசன் துறையைச் சேர்ந்த தம்பிராசா மார்க்கிரேட் என்னும் பெண் ரயில் முன் பாய்ந்து தற்கொலை செய்ய முயன்றதாய் காங்கேசன் துறைபொலிசாரால் குற்றஞ்சாட்டித் தொடரப்பட்ட வழக்கு மல்லாகம் நீதிபதி திரு. ஜி. எச். எஸ். அத்துறுபான முன்னிலையில் எடுத்துக் கொள்ளப்பட்டது. காங்கேசன் துறை புகையிரத நிலையத்தைச்சேர்ந்த சின்னத்தம்பி பழனியாண்டி, காங்கேசன்துறைபொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. பி. இ. அரசரத்தினம் ஆகியோர் சாட்சியமளித்த பின், எதிரி தாம் குற்றவாளியென்ருர். நீதிபதி கோர்ட்டில் பிரசன்னமாயிருந்த எதிரியின் கணவனை அழைத்து, "எதிரியைப் பிணையில் விட அழைத்துச்செல்கிறீரா?" என்றுகேட்டதற்கு எதிரியின் கணவனுன வைத்திலிங்கம் தம்பிராசா பதிலளிக்கையில், எதிரிக்கு தன்னைவிட முன்னர் மூன்று கணவர் இருந்ததாகவும் தான் எதிரியை அழைத்துச் செல்ல விரும்பவில்லையென்றும் கூறினு். எதிரியை 250 ரூபா பிணையில் செல்லுமாறும் இம்மாதம் 7-ம் திகதி கோர்ட்டில் மீண்டும் ஆஜராகும்படியும் உத்தரவிட்ட நீதிபதி வழக்கை 7-ம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

## நம்பிக்கையில்லாத் தீர்மானம்

ஷில்லாங், மார்ச் 6

தற்போதைய அஸ்ஸாம் மந்திரிசபை மீது நம்பிக்கையில்லை என எதிர்க்கட்சி அங்கத்தினர்கள் 14 பேர் சேர்ந்து கொண்டுவந்த பிரேரணை ஒன்றை சபாநாயகர் விவாதத்துக்கு அனுமதித்திருக்கிருர்.


இப்பொழுது திரையிடப்படுகிறது!

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) நவா (கும்பனித்தெரு)

வெலிங்டன் (யாழ்ப்பாணம்) வெம்பிளி (கண்டி) விஜயா (மட்டக்களப்பு)

மற்றும் 3 திரைகளில்

சிவாஜி கணேசன் — விஜயகுமாரி

முத்துராமன் — சௌகார் ஜானகி

மற்றும் பலர் நடிக்கும்



பார் மகளே பார்

பணம், அந்தஸ்து, மதிப்பு இவைதான் வாழ்க்கையின் உயிர்நாடி என்று கருதும் ஜமீன்தாராக நடிகர்திலகமும் அவரது இரு புதல்விகளாக புஷ்பலதாவும் விஜயகுமாரியும் தோன்றுகிருர்கள்



எஸ் - லொன்

இன்றைய அதிசயமான பைப்

இதுவே ஒரு உண்மையான பல்-பயன் தரும் பைப்.... திண்மையானது கனக்குறைவானது, மலிவானது, கையாள்வது சுலபம், உக்காது கறையான் அண்டாது, அரிப்பேற்படாது, கிருமி, கறள், அழுக்குப்படல எதிர்ப்புடையது. எஸ்-லொன் மின்சார கொண்டுயிட் வேலை உட்பட பெரும்பாலான வீட்டு. கைத்தொழில், விவசாய உபயோகத்திற்கு சிறந்த ஒப்பற்ற பைப்.

பைப் வேலை, உங்களுக்கு உண்டானுல் அதற்கு உகந்த பைப் எஸ்லொன்தான் ஆகவே இன்றே எங்குமுள்ள சிறந்த ஸ்டோர்களில் அதைக் கேட்டு வாங்க நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்.

ராஜேந்திரம்ஸ் லிமிட்டெட்.
மகாராஜா கட்டிடம்,
பேங்ஷால் வீதி, கொழும்பு-11.


இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் -1964-ம் ஆண்டு மார்ச் மாதம் 7-ம் திகதிஅச்சிட்டு வெளியிடப்பட்டது